தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### செய்யாறில் நாளை இயற்கை உணவு திருவிழா

செய்யாறில்,இயற்கை உணவு திருவிழா நாளை சனிக்கிழமை (ஜன.31) நடைபெறுகிறது. செய்யாறு கோபால் தெரு குறிஞ்சி குகன் இல்லத்தில் காலை நடைபெறும் நிகழ்ச்சியில், காஞ்சிபுரம் இன்னர்வீல் ரோட்டரி சங்க ஆ.ஹேமமாலினி இராஜமாணிக்கம்,சென்னை ஸ்ரீகணபதி ஹெல்த்கேர் டிரெய்னிங் சென்டர் ஆர்.லதா ஆகியோர் பங்கேற்று இயற்கை உணவு தயாரிப்பு குறித்த செயல் முறை விளக்கத்தை அளிக்கின்றனர். செய்யாறு டெம்பிள் சிட்டி ரோட்டரி சங்கத்தினர் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

### பரமத்தி வேலூர் சந்தையில் கொப்பரை விலை உயர்வு

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் கொப்பரை ஏல சந்தையில், கொப்பரை விலை உயர்ந்துள்ளதால், தென்னை பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். பரமத்தி வேலூர், கரூர் மாவட்டத்தில் இருந்து, கொப்பரையை ஏலம் விடுவதற்காக, பரமத்தி வேலூர் அருகே பொத்தனூரில், சேலம் ஒழுங்குமுறை விற்பனைக் குழு மையம் செயல்பட்டு வருகிறது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில், கொப்பரை, கிலோ ஒன்றுக்கு ரூ.90.15 வீதம் ஏலம் போனது. வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில், கிலோ ஒன்றுக்கு ரூ.95.72 வீதம் ஏலம் போனது. இந்த விலை உயர்வால், தென்னை பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

**ஒரு லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு! தேவைக்கேற்ப நிலையம் துவக்க முடிவு**

சிவகங்கை : மாவட்ட அளவில் 32 நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. கூடுதல் மையத்தை ஏற்படுத்தி 1 லட்சம் டன் நெல்லை கொள்முதல் செய்ய, நுகர்பொருள் வாணிப கழகம் இலக்கு நிர்ணயித்துள்ளது. மாவட்ட அளவில் 91 ஆயிரம் எக்டேரில் 7 வகையான நெல் ரகங்களை விவசாயிகள் நடவு செய்வர் என எதிர்பார்த்தனர். வடகிழக்கு பருவ மழை காரணமாக 2014 அக்., முதல் டிசம்பர் வரை நல்ல மழை பெய்தபோதும், கண்மாயில் நீர் தங்காததால், இருக்கும் நீரை வைத்து 66 ஆயிரம் எக்டேர் நிலத்தில் 1.20 லட்சம் விவசாயிகள் நெல் நடவு செய்திருந்தனர். ஜனவரி முதல் விளைந்த நெற்பயிர்களை விவசாயிகள் அறுவடை செய்து வருகின்றனர். அந்த வகையில், 3.20 லட்சம் டன் நெல் வரத்து இருக்கும் எனவும், இதில் விதை நெல், விவசாயிகள் தேவைக்கு பயன் படுத்துவது போக, ஒரு லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயித்தனர். கொள்முதல் நிலையம்: கடந்த முறை மாவட்டத்தில் 40 நிலையங்கள் அமைத்தனர். இந்த ஆண்டு 10 நாட்களாக 32 நிலையம் மற்றும் 2 மொபைல் நிலையம் மூலம் 1,099 டன் கொள்முதல் செய்துள்ளனர். மேலும் 16 நிலையம் திறக்கப்பட உள்ளன. முதல் ரக நெல் குவிண்டால் (100 கிலோ) ரூ.1,470, மற்ற ரகத்திற்கு ரூ.1,420 விலை வழங்குகின்றனர். மார்ச் வரை கொள்முதல் நிலையம் செயல்படும். இது தவிர, கூட்டுறவு துறை மூலம் எட்டியேந்தல், முளக்குளம், கொல்லங்குடி, சிங்கம்புணரி, அழகமாநகரி, செங் குளம்,

சூசையப்பர் பட்டிணத்தில் திறக்கப்படும் என, தெரிவித் துள்ளனர். அதிகாரிகள் தவிப்பு: இருப்பினும் விவசாயிகள் நலனுக்காக நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பதில், அரசியல் தலையீடு அதிகளவில் இருப்பதாக அதிகாரிகள் புகார் தெரிவிக் கின்றனர். இதனால், ஒவ்வொரு இடத்திலும் அரசியல் கட்சியினரை, விவசாயிகளை சமாளித்து நிலையம் துவக்கு வதற்குள் போதும் போதும் என வந்துவிடுவதாக அதிகாரிகள் புலம்புகின்றனர். கலெக்டர் முனுசாமி கூறுகையில்,"கடந்த முறை துவக்கிய இடங்களிலேயே கொள் முதல் நிலையங்கள் திறக்கப்படும். விவசாயிகள் கோரிக்கை வைத்தால் இன்னும் கூடுதல் நிலையங்கள் திறக்கப்படும். நெல் கொள் முதல் தொடர்பாக குளறுபடி நடந்தால், விவசாயி கள் புகார் தெரிவிக்கலாம்," என்றார்.

## விதை பரிசோதனை செய்து பயிரிட விவசாயிகளுக்கு அறிவுரை

திருவள்ளூர்: காய்கறி பயிரில் அதிக லாபம் கிடைக்க, விதை பரிசோதனை செய்து பயிரிடுமாறு, வேளாண் அலுவலர் அறிவுரை வழங்கி உள்ளார். திருவள்ளூர் விதை பரிசோதனை அலுவலக வேளாண் அலுவலர் ஞானசேகரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: தை பட்டத்தில், காய்கறிகள் விதைக்கும் பணியில் விவசாயிகள் ஆர்வமாக ஈடுபட்டு உள்ளனர். விதை முளைப்பு திறன் குறித்து அறிந்து கொள்ள விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் தாங்கள் பயிரிட உள்ள கத்தரி, மிளகாய், சுரை விதைளை, 150 கிராம் வீதமும்; கீரை, தக்காளி, 70 கிராம் வீதமும் எடுத்து, ஜே.என்.சாலை (ஆயில் மில் பேருந்து நிறுத்தம் அருகில்), பெரியகுப்பம், திருவள்ளூர் என்ற முகவரியில் செயல்பட்டு வரும், விதை பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கலாம்; கட்டணம், 30 ரூபாய். இவ்வாறு, அதில் கூறப்பட்டு உள்ளது.

## 1,435 விவசாயிகளுக்கு ரூ.10 கோடி வழங்கல்

திருவாலங்காடு; கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு, கரும்பு ஓட்டிய விவசாயிகளுக்கான பில் தொகை, 10 கோடி ரூபாய், நேற்று, பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருவாலங்காட்டில் இயங்கி வருகிறது. இந்த ஆலையில், நடப்பாண்டிற்கான அரவை, கடந்த ஆண்டு நவ., மாதம், 5ம் தேதி துவங்கியது. இதுவரை, 1.20 லட்சம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைக்கு, கடந்த டிசம்பர் மாதம், 10ம் தேதி, 1,435 விவசாயிகள் கரும்பு ஓட்டியுள்ளனர். இதில், கடந்த நவ., மாதம், 5ம் தேதி முதல் நவம்பர், 30ம் தேதி வரை, கரும்பு ஓட்டிய, 1,019 விவசாயிகளுக்கு வழங்கிய பில் தொகை, ஒரு டன் கரும்புக்கு 2,200 ரூபாய் வீதம் வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசு அறிவித்த மானிய தொகை, வாகன செலவு, என, ஒரு டன்னுக்கு, 450 ரூபாய் உயர்வு வழங்கப்படவில்லை. இதுகுறித்து, ஆலைய நிர்வாக மேலாண்மை இயக்குனர் மலர்விழி கூறுகையில், "மாநில அரசு ஒரு டன் கரும்புக்கு, 450 ரூபாய் கூடுதலாக வழங்கப்படும் என, அறிவித்திருந்தது. ஆனால், அந்த தொகை, நவம்பர் 30ம் தேதி, ஓட்டிய கரும்பு விவசாயிகளுக்கு, வழங்கப்படவில்லை' என்றார். மேலும், 'அந்த நிலுவை தொகை, 3 கோடி ரூபாய், நேற்று வழங்கப்பட்டது. இதுதவிர, டிசம்பர் மாதம், 1ம் தேதி முதல், டிச., 10ம் தேதி வரை, கரும்பு ஓட்டிய, 416 விவசாயிகளுக்கு, மாநில அரசு அறிவித்த மானிய தொகையுடன், 7 கோடி ரூபாயும், நேற்று, வழங்கப்பட்டது," என்றார்.

## பண்ணை மகளிர் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி

திருத்தணி: பண்ணை மகளிர் குழு உறுப்பினர்களுக்கு வேளாண் துறை சார்பில், திட்ட செயல்பாடுகள் குறித்த பயிற்சி, நேற்று, திருத்தணியில் அளிக்கப்பட்டது. தமிழக அரசின் உத்தரவின் படி, திருவள்ளூர் மாவட்டத்தில், 28 அம்மா பண்ணை மகளிர் குழுக்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இக்குழு உறுப்பினர்களுக்கு திட்ட செயல்பாடுகள் குறித்த பயிற்சி, திருத்தணி வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. உதவி இயக்குனர் பிரசாத் தலைமை வகித்தார். பயிற்சியை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சுந்தரராஜன் துவக்கி வைத்து பேசினார். தொடர்ந்து, வேளாண் துறை மற்றும் திரூர் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர்கள், தலைவர் ஆகியோர் வேளாண் துறை, தோட்டக்கலை துறை மற்றும் வேளாண் வணிக துறை ஆகியவற்றின் செயல்பாடுகள், சிறு தானியங்கள் உற்பத்தி, தொழில்நுட்பம் மற்றும் மதிப்பு கூட்டுதல் பொருட்கள் தயாரித்தல் குறித்து குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தனர். இந்த பயிற்சியில், திருத்தணி, ஆர்.கே.பேட்டை மற்றும் பள்ளிப்பட்டு ஒன்றியங்களில் இருந்து, 50 மகளிர் பண்ணை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு தொழில்நுட்ப கையேடு, சிறு தானியங்கள் குறித்து மற்றும் வழிகாட்டி புத்தகம் இலவசமாக வழங்கப்பட்டது.

## தென்னை மரம் ஏறும் பயிற்சி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அருகே கருவி மூலம் தென்னை மரம் ஏறும் பயிற்சி வழங்கப்பட்டது. கிருஷ்ணகிரி அடுத்த எலுமிச்சங்கிரியிலுள்ள டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையம் மற்றும் தென்னை வளர்ச்சி வாரியம் இணைந்து, 20 நபர்களுக்கு கருவி மூலம் தென்னை

மரம் ஏறும் பயிற்சியினை ஆறு நாட்கள், அறிவியல் மைய வளாகத்தில் வழங்கியது. வேளாண்மை துறை துணை இயக்குனர் மணி பங்கேற்று, பயிற்சியை துவக்கி வைத்து, "கருவி மூலம் தென்னை மரம் ஏறும் பயிற்சியானது, ஆட்பற்றாக்குறை பிரச்னையினை தீர்க்கும். பயிற்சி பெறும் பயனாளிகள் அனைவரும் ஒருங்கிணைந்து தென்னை மரம் ஏறும் குழுவினை ஏற்படுத்தினால், அதன் மூலம் அரசின் நலத்திட்டங்களை பெறமுடியும்," என்றார். வேளாண்மை அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜ் பேசுகையில், "தென்னை மரம் ஏறும் பயிற்சியில் பங்கேற்றுள்ளவர்களுக்கு மரம் ஏறும் பயிற்சி மட்டும் வழங்கப்படாமல், தென்னையில் மகசூலை அதிகரிக்கவல்ல தொழில்நுட்பங்கள் வழங்கப்படவுள்ளதாகவும், அவற்றை பயனாளிகள் முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும்," என்றார். இப்பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு மரம் ஏறும் பயிற்சியுடன், தென்னை மரம் ரகம் தேர்வு செய்தல், நடவு முறை, உர மேலாண்மை, பூச்சி மேலாண்மை மற்றும் நோய் மேலாண்மை போன்ற தொழில்நுட்பங்கள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு கிராம வளர்ச்சி நிறுவனத்தினை சார்ந்த விஜிரமேஷ் பங்கேற்று, தென்னை வளர்ச்சி வாரியத்தால் வழங்கப்படும் ஒரு லட்சத்திற்கான விபத்து காப்பீடு குறித்தும், அதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்து, பயனாளிகளுக்கு மரம் ஏறும் கருவியினையும், சான்றிதழையும் வழங்கினார். பயிற்சியை, தென்னை வளர்ச்சி வாரியத்தால் பயிற்சி பெற்ற சுரேஷ் மற்றும் வஜ்ஜிரம் ஆகியோர் வழங்கினர்.

## <u>திருவாரூரில் 7 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் நிச்சயம்: முதுநிலை மண்டல மேலாளர் நம்பிக்கை</u>

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் மொத்தம், ஒரு லட்சத்து, 48 ஆயிரம் ஹெக்டரில் சம்பா சாகுபடி செய்திருந்தனர். இந்த பயிர்கள் அனைத்தும் விளைச்சல் கண்டுள்ளதால், விவசாயிகள்

அறுவடை பணியை மேற்கொண்டு வருகின்றனர். விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்வதற்காக மாவட்டம் முழுவதும், 431 அரசு நேரடி கொள்முதல் நிலையங்கள் மற்றும், 11 நடமாடும் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் நடைபெற்று வருகிறது. நெல் கொள்முதல் குறித்து நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி கூறியதாவது: திருவாரூர் மாவட்டத்தில், 28ம் தேதி வரை, மொத்தம், ஒரு லட்சத்து, 1,500 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சராசரியாக நாள் ஒன்றுக்கு, 8,000 மெட்ரிக் டன் கொள்முதல் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில், கடந்த ஆண்டு இதே நாளில், 96 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது. கடந்தாண்டில் மொத்தம், மூன்று லட்சத்து, 73 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. டந்த, 2011-12 ம் ஆண்டில் அதிகபட்சமாக, ஆறு லட்சத்து, 65 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது.அந்த ஆண்டை போல நடப்பாண்டிலும் மகசூல் அதிகமாக இருந்து வருவதால், ஏழு லட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் மொத்தம் சாகுபடி செய்யப்பட்டுள்ள, ஒரு லட்சத்து, 48 ஆயிரம் ஹெக்டேரில், 30 ஆயிரம் ஹெக்டேர் அளவில் அறுவடை நடைபெற்றுள்ளது. மேலும், சாகுபடி பரப்பில், 60 சதவிகிதம் அளவிற்கு பொதுரக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதால், அந்த பயிர்கள் இனிமேல் தான் அறுவடைக்கு தயாராகும். எனவே, ஏழு லட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் நிச்சயமாக கிடைக்கும். கொள்முதல் நிலையங்களில், ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் முதுநிலைமண்டல மேலாளர் அலுவலகத்துக்கு 04366 222532 என்ற தொலைபேசி எண்ணிலும், முதுநிலை மண்டல மேலாளருக்கு, 9442255542 என்ற மொபைல் எண்களில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**<u>தூத்துக்குடி மாவட்டத்தில் 15 சதவீதம் மழை அதிகரிப்பு ; 10 ஆயிரம் எக்டேர் பயிர் பரப்பளவு அதிகரிப்பு * கலெக்டர் ரவிக்குமார் தகவல்</u>**

தூத்துக்குடி : "தூத்துக்குடி மாவட்டத்தில் இந்த ஆண்டு சராசரி மழையளவை விட 15 சதவீதம் அதிகரித்ததால், 10 ஆயிரம் எக்டேர் பயிர் பரப்பளவு அதிகரித்துள்ளதாக," கலெக்டர் ரவிக்குமார் தெரிவித்தார். மழை பொழிவு அதிகம்: தூத்துக்குடி மாவட்டம் புதியம்புத்தூர் பகுதியில் விவசாயிகளிடம் நேரடி கலந்துரையாடலில் கலெக்டர் ரவிக்குமார் கலந்து கொண்டார். விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். பின்னர் அவர் தெரிவித்தாவது: தூத்துக்குடி மாவட்டத்தில் ஆண்டுக்கு சராசரி மழையளவு 622.2 மி.மீ., வடகிழக்கு பருவமழை காலத்தில் மட்டும் சராசரியாக 429 மி.மீ., மழை கிடைக்கும். இந்த ஆண்டு வழக்கத்திற்கு மாறாக அதிக மழை பெய்துள்ளது. இந்த ஆண்டு சராசரியாக 763.35 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. வடகிழக்கு பருவமழையில் மட்டும் 555.44 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. இது ஆண்டு சராசரியில் 15 சதவீதம் அதிக மழைபெய்துள்ளது. வடகிழக்கு பருவ மழைக்காலத்தில் மட்டும் 29 சதவீதம் அதிக மழை பெய்துள்ளது. பயிர் பரப்பு அதிகரிப்பு: இந்த ஆண்டு பயிர் செய்யப்பட்ட பகுதி எக்டேரில், நெல் பயிர் 17 ஆயிரம் எக்டேரிலும் சிறு தானியம் 48 ஆயிரத்து 464 , பயிறுவகை 76 ஆயிரத்து 728, எண்ணெய்வித்துக்கள் 4 ஆயிரத்து 186, பருத்தி 6 ஆயிரத்து 671, மிளகாய் 11 ஆயிரத்து 414, காய்கறிகள் 3 ஆயிரத்து 116 வாழை 8 ஆயிரத்து 890 எக்டேரிலும் பயிர் செய்யப்பட்டுள்ளது. மொத்த சாகுபடி பரப்பளவு 10 ஆயிரம் எக்டேர் அதிகரித்துள்ளது.சிறப்பான அறுவடை: மழை பொழிவு அதிகம் காரணமாக அனைத்து பயிர்களிலும் அறுவடை அதிகரித்துள்ளது. எக்டேருக்கு அரிசி 4ஆயிரத்து 800 கிலோவும், சிறுதானியங்கள் 4ஆயிரம் கிலோவும், பயிறு வகைகள் ஆயிரம் கிலோவும் விவசாயிகளுக்கு

கிடைத்துள்ளது. மொத்தத்தில் பயிர் உற்பத்தி அதிகரித்துள்ளது மகிழ்ச்சியை தருகிறது, என அவர் தெரிவித்தார்.

**திருச்செந்துறையில் வாழைத்தார் ஏலம்**

திருச்சி: திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வளாகத்தில், வாழைத்தார் ஏலம் நடந்தது. திருச்சி அருகே திருச்செந்துறை வாழை வளாகத்தில் நடந்த ஏலத்துக்கு, கிளியநல்லூர், கரியமாணிக்கம், சிறுகாம்பூர், சென்னக்கரை, செங்குடி, குணசீலம், ஆமூர் ஆகிய கிராமங்களை சேர்ந்த, 47 விவசாயிகள் வாழைத்தார்களை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். இதில், திண்டுக்கல், பழனி, பண்ணைப்பட்டி, பெருகமணி, சிறுகமணி, ஜீயபுரம், கடியாகுறிச்சி, நம்பியூர், புத்தூர், கே.கே., நகர் ஆகிய இடங்களை சேர்ந்த, 25 விவசாயிகள் பங்கேற்றனர். ரஸ்தாளி வாழைத்தார், 220 ரூபாய்க்கும், பூவன், 300 ரூபாய்க் கும், கற்பூரவள்ளி, 190 ரூபாய்க்கும், மொந்தன், 205 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, ஒரு லட்சத்து, 92 ஆயிரத்து, 410 ரூபாய் மதிப்பில் ஏலம் நடந்தது.

**வேட்டை நாய்களை வளர்க்க கூடாது; விவசாயிகளுக்கு கலெக்டர் கண்டிப்பு**

தேனி : "விவசாயிகள் தங்களது தோட்டங்களில் நாய் வளர்ப்பதில் தவறு இல்லை. ஆனால் வனவிலங்குகளை விரட்டுவதற்காக வேட்டை நாய்களை வளர்க்க கூடாது," என கலெக்டர் வெங்கடாச்சலம் எச்சரித்தார். தேனி மாவட்டத்தில் மலையடிவார கிராமங்களில் காட்டுப்பன்றிகள் உள்ளிட்ட வனவிலங்குகள் புகுந்து பயிர்களை நாசம் செய்வதாக விவசாயிகள் கலெக்டரிடம் புகார் கூறினர். இந்த விலங்குகளை விரட்ட நாய்களை வளர்க்க அனுமதிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.இவர்களுக்கு பதிலளித்த கலெக்டர்,

மலையடிவாரத்தில் விவசாயம் செய்பவர்கள் வனவிலங்குகளை விரட்ட எக்காரணம் கொண்டும் வேட்டை நாய்களை வளர்க்க கூடாது. சாதாரண ரக வீட்டு நாய்களை வளர்க்கலாம். இதில் தவறு இல்லை. நாய்களை வளர்ப்பதாக கூறி, சிலர் வேட்டை நாய்களை வளர்த்து, இரவில் வனத்திற்குள் வேட்டைக்கு செல்வதாக தகவல் கிடைத்துள்ளது. இது போன்ற நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளேன். வனவிலங்குகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க மலையடி வாரங்களில் அகழி வெட்டுவது போன்ற பாதுகாப்பு பணிகளை செய்ய வனத்துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளும் மலையடிவாரங்களில் வனவிலங்குகளால் கவரப்படாத, வனவிலங்குகள் விரும்பாதா மிளகாய் போன்றவற்றை சாகுபடி செய்யலாம். தேன்கூடு வளர்க்கலாம். இதற்கு தேவையான உதவிகளை தோட்டக்கலைத்துறை மூலம் மாவட்ட நிர்வாகம் செய்து கொடுக்கும், என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நவீன முறை கறவை மாடு வளர்ப்பு பயிற்சி முகாம்</u>**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் அடுத்த ஏனாத்தூரில் உள்ள உழவர் பயிற்சி மையத்தில் நவீன முறையில் கறவை மாடு வளர்ப்பு பயிற்சி முகாம் நேற்று நடந்தது. உழவர் பயிற்சி மையத்தின் தலைவர் வெங்கட சுதாகர்ராவ் தலைமை வகித்து பயிற்சி அளித்தார். இதையடுத்து விவசாயம், கால்நடை வளர்ப்பது விவசாயிகளுக்கு முக்கியமானது. கறவை மாடு வளர்ப்பதன் மூலம் வருவாய் ஈட்டலாம். கறவை மாட்டின் பாலில் சரிவிகித சத்து உள்ளது. குழந்தைகள் முதல் அனைவருக்கும் ஏற்றது. பால் உற்பத்தியை பெருக்கும் வகையில் கறவை மாடுகளை பராமரிப்பதன் மூலம் அதிக லாபம் ஈட்டலாம். இயற்கையான உணவு கொடுத்து கறவை மாடுகளை பராமரிக்க வேண்டும் என விவசாயி

களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**13 ஆண்டுகளாக வறண்டு கிடந்த துரை ஏரிக்கு தண்ணீர் வரத்து**

சூளகிரி, : கெலவரப்பள்ளி அணை திறக்கப்பட்ட தால், 13 ஆண்டுக்கு பின் சூளகிரி அருகே துரை ஏரிக்கு நீர் வர துவங்கியுள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ் ச்சி அடைந்தனர். மேலும், நிரந்தர கால்வாய் வசதிக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரிக்குட்பட்ட மருதாண்டப்பள்ளி, அட்டகுறுக்கி, வரதாபுரம், காமன்தொட்டி மற்றும் சுற்று வட்டார பகுதி மக்களின் நீராதாரமாக அங்குள்ள துரை ஏரி உள்ளது. இதன்மூலம் சுமார் 500 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், ஏரிக்கு தண்ணீர் வரத்து முற்றிலும் சரிந்தது. இந்நிலையில், கடந்த ஆண்டு இறுதியில் ஓரளவு பெய்த மழையால் ஏரிக்கு நீர் வரத்து அதிகரித்தது. நேற்று முதல் கெலவரப்பள்ளி அணையில் இருந்து திறக்கப்பட்ட உபரிநீர் ஏரிக்கு வரத்துவங்கியுள்ளது. வேப்பனஹள்ளியில் இருந்து சின்னாறு அணை வழியாக இந்த தண்ணீர் துரை ஏரிக்கு வந்தது. கடந்த 13 ஆண்டுகளாக வறண்டு கிடந்த இந்த ஏரிக்கு தண்ணீர் வந்துள்ளதை அறிந்த சூளகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார மக்கள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர். அவர்கள் திரளாக வந்து ஏரியை பார்த்தபடி சென்று வருகிறார்கள். இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறியதாவது: கடந்த சில ஆண்டுகளாக வறண்டு கிடந்த இந்த துரை ஏரியில் தற்போது நீர் வந்து உள்ளதால், விவசாய நிலங்கள் போதிய பாசன வசதியை பெற வாய்ப்பாக உள்ளது. மேலும் தொகுதி எம்பி அசோக்குமார், சூள கிரி ஒன்றிய குழு தலைவர் ஹோம்நாத் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் இந்த துரை ஏரியை கடந்த சில தினங்களுக்கு முன்பு பார்வையிட்டு சென்றுள்ளனர். நாங்கள் அவர்களிடம் இந்த ஏரிக்கு நிரந்தரமாக கால்வாய் வசதி கேட்டு மனு கொடுத்துள்ளோம் என்றனர்.

சூளகிரி அருகே நிரந்தர கால்வாய் வசதிக்கு கோரிக்கை
கடந்த சில ஆண்டுகளாக வறண்டு கிடந்த இந்த துரை ஏரியில் தற்போது நீர் வந்து உள்ளதால், விவசாய நிலங்கள் போதிய பாசன வசதியை பெற வாய்ப்பாக உள்ளது. மேலும் தொகுதி எம்பி அசோக்குமார், சூள கிரி ஒன்றிய குழு தலைவர் ஹோம்நாத் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் இந்த துரை ஏரியை கடந்த சில தினங்களுக்கு முன்பு பார்வையிட்டு சென்றுள்ளனர். நாங்கள் அவர்களிடம் இந்த ஏரிக்கு நிரந்தரமாக கால்வாய் வசதி கேட்டு மனு கொடுத்துள்ளோம் என்றனர்.

## <u>தொட்டியம் பகுதியில் சம்பா அறுவடை தீவிரம்</u>

தொட்டியம், : தொட்டியம் பகுதியில் சம்பா நெல் அறுவடை பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. தொட்டியம் தாலுகாவில் காட்டுப்புத்தூர், ஏலூர்பட்டி, தொட்டியம் ஆகிய பிர்காக்களில் உள்ள 30 வருவாய் கிராமங்களில் அம்பா சமுத்திரம், வெள்ளை பொன்னி, ஏ.டி.பி.39, கோ.ஆர்.50, ஆந்திரா பொன்னி உள்பட பல்வேறு சம்பா நெல் ரகங்கள் சுமார் 5 ஆயிரத்து 593 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. முன் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட தொட்டியம், காட்டுப்புத்தூர் பகுதியில் உள்ள வயல்களில் தீவிரமாக இயந்திரம் மற்றும் ஆட்கள் மூலமாக அறுவடை பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் பல்வேறு பகுதிகளில் அறுவடைக்கு தயாராக உள்ள நிலையில் ஆட்கள் பற்றாக்குறை, அறுவடை இயந்திரம் செல்ல முடியாத நிலை ஆகியவற்றால் குறிப்பிட்ட கால கட்டங்களில் நெல் அறுவடை செய்ய முடியாத நிலை உள்ளது. இதனால் நெற்கதிர்கள் முற்றி வயலிலேயே உதிரும் நிலை உள்ளது.

## <u>துறையூர் விற்பனை கூடத்தில் 2,200 கிலோ பருத்தி ஏலம்</u>

திருச்சி, : துறையூரில் 2,200 கிலோ பருத்தி மறைமுக ஏலம் விடப்பட்டது. திருச்சி மாவட்டத்தில் பருத்தி 16,453 எக்டேரில் சாகுபடி செய்யப் பட்டுள்ளது. கடந்த வருடம் முதல் துறையூர் ஒழுங்கு முறை விற்பனை

கூடத்தில் மறைமுக ஏலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் தற்போது பருத்தி அறுவடை துவங்கியுள்ளதால் துறையூரில் மறைமுக ஏலம் நடைபெற்றது. கோட்டாத்தூர், நாகலாபுரம், ஒக்கரை, உப்பிலியபுரம் ஆகிய கிராமங்களில் இருந்து 10 விவசாயிகள் தங்கள் அறுவடை செய்த 115 மூட்டை பருத்தியை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். நாமக்கல், பெரம்பலூர், துறையூர் பகுதிகளில் இருந்து 5 வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர். ஒரு கிலோ பருத்தி அதிகபட்சமாக ரூ.38க்கும், சராசரியாக ரூ.35க்கும் ஏலம் போனது. மொத்தம் 2,200 கிலே பருத்தி ரூ.68,520க்கு ஏலம் போனது. வரும் 4ம்தேதி நடை பெறும் மறைமுக ஏலத்தில் துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை, முசிறி, மண்ணச்சநல்லூர் வட்டாரங்களில் பருத்தி அறுவடை செய்து கொண்டிருக்கும் விவசாயிகள், துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு வந்து, மறைமுக ஏலம் மூலம் நல்ல விலை பெற்று பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>திருச்செந்துறையில் 3,460 வாழைத்தார் ரூ.1.92 லட்சத்துக்கு ஏலம்</u>**

திருச்சி, : திருச்செந்துறையில் 3,460 வாழைத்தார் ஏலம் போனது. ஸ்ரீரங்கம் அடுத்த திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் செவ்வாய்க்கிழமை தோறும் வாழைத்தார் பொது ஏலம் விடப்பட்டு வருகிறது. அதன்படி நேற்றுமுன்தினம் துவங்கி நேற்று அதிகாலை வரை பொது ஏலம் நடந்தது. இதில் கிளியநல்லூர், கரியமாணிக்கம், சிறுகாம்பூர், சென்னக்கரை, செங்குடி, குணசீலம், ஆமூர் ஆகிய கிராமங்களை சேர்ந்த 47 விவசாயிகள் பூவன், ரஸ்தாலி, கற்பூரவள்ளி, மொந்தன், பச்சநாடன், ஏலரிசி ரகங்களை சேர்ந்த 3,460 வாழைத்தார்களுடன் வந்தனர். திண்டுக்கல், பழனி, பண்ணப்பட்டி, பெருகமணி, சிறுகமணி, ஜீயபுரம், கடியாக்குறிச்சி, நம்பியூர், புத்தூர், கே.கே.நகர் ஆகிய இடங்களிலிருந்து வந்திருந்த 25 வியாபாரிகள்

வாழைத்தார்களை ஏலம் எடுத்தனர். இந்த வாழைத்தார்கள் அனைத்தும் ரூ.1,92,410க்கு ஏலம் எடுக்கப்பட்டது. இதில் ரஸ்தாலி தார் ஒன்று அதிகபட்சமாக ரூ.220, பூவன் ரூ.300, கற்பூரவள்ளி ரூ.190, மொந்தன் ரூ.205 வீதம் ஏலம் போனது. இந்த வாரமும் இடைத்தரகர்களின்றி, எந்தவித கமிஷன் இல்லாமல் ஏலத்தில் பங்கேற்ற விவசாயிகள் அனைவருக்கும் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

**<u>தோட்டக்கலைத்துறையில் 50 சதவீத மானியத்தில் காய்கறிவிதை விநியோகம்</u>**

கிருஷ்ணராயபுரம், : கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் தோட்டக்கலை துறை மூலமாக காய்கறி விதைகள் 50சதவீத மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது. கிருஷ்ணராயபுரம் தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் கலா (பொறுப்பு) விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் பெருமளவு விவசாயிகள் காய்கறி சாகுபடி செய்து வருகின்றனர். தற்பொழுது கொடி வகை காய்கறிகள் சாகுபடி செய்தால் அதிக மகசூல் செய்து லாபம் பெறலாம். இப்பகுதியில் பெருமளவு விவசாயிகள் தக்காளி, வெண்டை, கத்தரிக்காய், மிளகாய், பாகற்காய், அவரை, உள்ளிட்ட காய்கறி பயிர்கள் சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது தை, மாசி மாதங்களில் அதிக அளவு கொடி வகை காய்கறிகள் சாகுபடிகள் செய்யலாம். மேலும் சாகுபடி செய்யும் காய்கறி விதைகள் 50 சதவீத மானியத்தில் தோட்டக் கலை துறை மூலமாக வழங்கப்படுகிறது. பயிர் செய்வதற்கான வழிமுறைகள் குறித்து தெரிந்து கொள்ள கிருஷ்ணராயுபுரத்தில் உள்ள தோட்டக்கலை துறை அலுவலகத்தை அணுகி விவசாயிகள் பயன்பெறலாம் என்று தெரிவித்துள்ளார்.

**அனுக்கூர் கிராமத்தில் புதிய கால்நடை நிலையம் திறப்பு 7,943 கால்நடைகள் பயனடைய உள்ளன**

பெரம்பலூர், : அனுக்கூர் கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் திறக்கப்பட்டது. இங்கு மேற்கொள்ளப்படும் சுகாதாரப் பணிகளால் 7,943 கால்நடைகள் பயனடைய உள்ளன. பெரம்பலூர் மாவட் டம், வேப்பந்தட்டை ஒன்றியம், அனுக்கூர் கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் தொடங்கிட அரசு உத்தரவிட்டதைத் தொடர்ந்து நேற்று பெரம்பலூர் கலெக்டர் தரேஸ்அகமது புதிய கால்நடை கிளை நிலையத்தை நேற்று திறந்து வைத்தார். பெரம்பலூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 35 கால்நடை மருந்தகங்கள் மற்றும் ஒரு கால்நடை கிளை நிலையம் மூலமாக 1,20,287 பசுமாடுகள், 951 எருமை மாடுகள், 1,24,651 வெள்ளாடுகள், 39,407 செம்மறியாடுகள், 72,398 கோழி கள், 4,985 நாய்கள், 5,186 பன்றிகள் என மொத்தம் 3,67,883 கால்நடைகளின் சுகாதாரப் பணிகளான சிகிச்சை பணி, ஆண்மை நீக்கம், குடற்புழுநீக்கம், செயற்கை முறை கருவூட்டல், தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப் படுகிறது. கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கேற்ப ஆண்டுதோறும் கிளை நிலை யங்களாக உள்ளவற்றை தரம் உயர்த்தி கால்நடை மருந்தகங்களாகவும், கால்நடைக ளின் நலம் காக்க போதிய வசதியில்லாத கிராமங்களில் அரசின் விதிகளுக்கேற்ப புதிய கால்நடை கிளை நிலையங்கள் அமைத்திட வும் அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி வேப்பந்தட்டை ஒன்றியம், அனுக் கூர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய கால் நடை கிளைநிலையத்தை நேற்று கலெக்டர் தரேஸ்அஹமது திறந்து வைத்தார். இந்த கிளை நிலையத்தின் மூலம் அனுக்கூர் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள அ.குடிகாடு, பிரம்மதேசம், அண்ணாநகர், கட்டபுலிக்காடு, சிறுவயலூர் ஆகிய கிராமங் களைச் சேர்ந்த 2,710 பசு மாடுகள், 15 எருமை மாடு கள், 969 செம்மறி ஆடுகள், 3,115 வெள்ளாடுகள், 1,134 கோழிகள் என மொத்தம் 7,943 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் சினைப்பரிசோதனை ஆண்மை நீக்கம்,

குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கான தொடக்க விழாவில், பெரம்பலூர் கால்நடை பராமரிபுத்துறை மண்டல இணை இயக்குநர்(பொ) தங்கராசு, சிறப்பறிஞர் மோகன், உதவி இயக்குநர் மனோ கரன், கால்நடை உதவி மருத்துவர் ராமன், கலியபெருமாள், ரவிச்சந்திரன், அனுக்கூர் ஊராட்சித்தலைவர் ஜோதிதுரைராஜ், ஒன்றிய கவுன்சிலர் மகேஷ்வரி சுப்ரமணியம், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தலைவர் தங்கராசு, செயலாளர் ராஜேந்திரன், கால்நடை ஆய்வாளர் ராஜசேகரன், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் நடராஜன், செல்விவிநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பயிர்களை பாதுகாக்க விதை நேர்த்தி அவசியம் வேளாண் துறை ஆலோசனை

பழநி, : பயிர்களை பாதுகாக்க விதை நேர்த்தி செய்வதன் அவசியம் குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். குழந்தைகளுக்கு பிற்காலத்தில் வரக்கூடிய கக்குவான், போலியோ போன்ற நோய்கள் வராமல் தடுப்பதற்கு தடுப்பூசிகள், சொட்டு மருந்துகள் கொடுப்பதைப் போலவே, பயிர்களை விதை மூலம் பரவக்கூடிய பூஞ்சான் நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு விதையுடன் பூஞ்சான மருந்து கலந்து விதை நேர்த்தி செய்திட வேண்டும். விதை மூலம் பரவும் இலைப்புள்ளி, இலைக்கருகல், இலை உறை அழுகல் மற்றும் குலை நோய் போன்ற பூஞ்சான நோய்களை தடுக்க 1 கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் “கார்பன்டைசிம்“ கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் விதைக்க வேண்டும். இல்லாவிட்டால் 1 கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் “டிரைக்கோ டெர்மாவிருடி“ அல்லது 1 கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் “சூடோமோனாஸ் ப்ளாரசன்ஸ்“ என்ற உயிரியல் பூஞ்சான மருந்தை விதைப்பதற்கு முன் கலந்து விதைக்க வேண்டும். 1 ஏக்கர் விதைக்க தேவையான விதைக்கு விதை நேர்த்தி செய்ய 10 முதல் ரூ.20 வரை

செலவாகும். ஆனால், விதை நேர்த்தி செய்வதால், பயிர் வளர்ச்சி காலத்தில் நோய்கள் தாக்கி, அவற்றை கட்டுப்படுத்த மருந்திற்கு செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. நெல், சிறுதானியங்கள், பருத்தி, கரும்பு, எள் மற்றும் சூரியகாந்தி பயிர்களுக்கு விதைநேர்த்தி செய்வதற்கு 1 ஏக்கர் விதைக்கு அசோஸ்பைரில்லம் 1 பாக்கெட் ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும். நிலக்கடலை மற்றும் பயிறு வகைகளுக்கு விதை நேர்த்தி செய்வதற்கு 1 ஏக்கர் விதைக்கு "ரைசோபியம்கல்ச்சர்" 1 பாக்கெட்டை ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின் விதைக்க வேண்டும். உயிர் உர விதை நேர்த்தி செய்வதால், உயிர் உரங்கள் காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு கொடுக்கும். அதனால் இளம் பயிரின் இலைகள் கரும்பச்சை நிறத்துடன் செழிப்பாக வளரும். இதன் மூலம் உரச் செலவை குறைக்கலாம். எனவே விவசாயிகள் பூசனக் கொல்லி விதை நேர்த்தி செய்து பயிர்களை நோய்களிலிருந்து வருமுன் காக்க வேண்டுமென பழநி வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மக்காச்சோளத்தை விற்க இதுவே சரியான நேரம் துணை இயக்குனர் அறிவுரை

திண்டுக்கல், : விலை உயர்வதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளதால் விவசாயிகள் அறுவடை செய்த மக்காச்சோளத்தை உடனே விற்க பரிந்துரைக்க படுகிறார்கள் என்று திண்டுக் கல் மாவட்ட வேளாண்மை வணிகத் துறை துணை இயக்குநர் செல்வராஜ் தெரிவித்துள்ளார். நடப்பாண்டில் உலகள வில் மக்காச்சோள உற்பத்தி 990 மில்லின் டன்னாகும். இது மொத்த தேவையான 971 மில்லின் டன்களை விட அதிகமாகும். இந்தியாவில் மக்காச் சோள ஏற்றுதி(2012-13) 4.7 மில்லியன் டன்களில் இரு ந்து குறைந்து நடப்பாண்டில் 2.7 மில்லியன் டன்களாக உள்ளது. தற்போது மக்காச் சோள விலை வீழ்ச்சி அடை

ந்துள்ளது. இதற்கு குறைந்த ஏற்றுமதி, அமெரி க்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நல்ல விளைச்சல் உள்ளிட்டவையே காரணம். பீகார், ஆந்திரா, மகாரா ஷ்ட்ரா, கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை மக்காச்சோளம் பயிரிடும் முக் கிய மாநிலங்களாகும். தமிழ் நாட்டில் இறவை மற்றும் மானாவாரி சாகுபடி முறை யில் பெரம்பலூர், திண்டுக்கல், சேலம், தூத்துக்குடி, விருதுநகர், திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. மானாவாரி யில் மக்காச்சோளம் திண்டுக்கல் மாவட்டத்தில் 23 ஆயிரத்து 355 ஹெக்டேர் பயிரிடப்பட்டுள்ளது. உடுமலைப்பேட்டை, விருதுநகர், அருப்புக்கோட் டை மற்றும் திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் இருந்து மக்காச்சோள வரத்து பிப்ர வரி வரை வரும். உடுமலைப்பேட் டை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இவற்றின் விலை குவிண்டாலுக்கு ரூ.1170 முதல் ரூ.1230 வரை உள்ளது. விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 12 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய விலையை தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையம் ஆராய்ந்தது. விலை மற்றும் வர்த்தக ஆய்வுகளின் அடிப்படை யில் மக்காச்சோளத்தின் விலை பிப்ரவரி-மார்ச்சில் குவிண்டாலுக்கு ரூ.1250 முதல் ரூ.1300 வரை இருக் கும் என கணிக்கப்பட்டுள் ளது. விலை உயர்வதற்கான வாய்ப்பு குறைவு. எனவே விவசாயிகள் அறுவடை செய்த மக்காச்சோளத்தை உடனே விற்க பரிந்துரைக்கப்படுகிறார் கள் என்று திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை வணிகத்துறை துணை இயக்குநர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

## <u>மரம் வளர்ப்பதை ஊக்குவிக்க மாணவிகள் பெயரில் மரக்கன்றுகள்</u>

காரைக்குடி, : மரம் வளர்ப்பதை இளைய தலைமுறையினரிடம் ஊக்குவிக்கும் புது முயற்சியாக கல்லூரியில் மாணவிகளின் பெயர்களிலே மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக

வளாகத்தில் உமையாள் ராமனாதன் மகளிர் கலைக்கல்லூரி செயல்பட்டு வருகிறது. இங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் படிக்கின்றனர். மாணவிகளிடம் மரம் வளர்ப்பை ஊக்கப்படுத்தும் வகையில், கல்லூரி நிர்வாகம் இந்த ஆண்டை பசுமை ஆண்டாக அறிவித்துள்ளது. அதன்படி 2015 பசுமை ஆண்டை வரவேற்கும் விதமாக 2015 வடிவத்தில் 250க்கும் மேற்பட்ட மாணவிகள் கையில் மரக்கன்றுகளுடன் அமர்ந்திருந்தனர். நிகழ்ச்சிக்கு கல்லூரி தலை வர் வைரவன் தலைமை வகித்தார். முதல்வர் ஹேமா மாலினி வரவேற்றார். சங்கராபுரம் ஊராட்சி தலைவர் மாங்குடி, இலுப்பகுடி ஊராட்சி தலைவர் அன்பரசு, லயன்ஸ் செனட் தலைவர் ஜானகிராமன், ஒருங்கிணைப்பாளர்கள் சிவகாமி, கவிதா, ரதிதேவி, முத்துபிரியா உள்பட கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர். விழா குறித்து முதல்வர் ஹேமாமாலினி கூறுகையில், ‘இளைய சமுதாயத்தினரிடம் ஒரு திட்டத்தை கொண்டு சென்றால் தான் அத்திட்டம் வெற்றி பெறும். சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் புவி வெப்பமயமாதலை தடுக்க மரங்களை வளர்ப்பதை தவிர வேறு வழியில்லை. இதனை கருத்தில் கொண்டு இந்த ஆண்டை பசுமை ஆண் டாக அறிவித்துள்ளோம். இதற்காக லயன்ஸ் கிளப் உதவியுடன் 2015 மரக்கன்றுகளை பெற்றுள்ளோம். இந்த மரக்கன்றுகளை ஈடுபாட்டுடன் வளர்க்க வேண்டும் என்பதற்காக மாணவிகளின் பெயர்களை சூட்டியுள்ளோம். அப்போது தான் அவர்களுக்கும் மரம் வளர்க்க வேண்டும் என்ற ஆசை வரும். எதையும் இலவசமாக கொடுத்தால் மதிப்பு இருக்காது என்பதற்காக ஒரு ரூபாய்க்கு மரக்கன்று வழங்கியுள்ளோம். கல்லூரியில் படிக்கும் 1,380 மாணவிகள், 60 ஆசிரியர்களுக்கு மரக்கன்று வழங்கப்பட்டுள்ளது. தவிர சங்கராபுரம் ஊராட்சிக்கு 200, இலுப்பகுடி ஊராட்சிக்கு 200 மரக்கன்றுகளை வழங்கியுள்ளோம். இதனை நாங்களே பராமரிக்க முடிவு செய்துள்ளோம்’ என்றார்.

## மீன் உபபொருட்கள் தயாரிப்பு பயிற்சி இன்று தொடங்குகிறது

நாகர்கோவில், : பறக்கை மீன்வளப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலை வர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பறக்கையிலுள்ள மீன்வள ஆராய்ச்சி மையத்தில் மீன்வளம் சம்பந்தப்பட்ட இலவச பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. தற்போது மீன் உபபொருட்கள் தயாரிப்பு என்ற தலைப்பில் பயிற்சி முகாம் இன்று(28ம் தேதி) முதல் 30ம் தேதி வரை 3 நாட்கள் நடக்கிறது. இம்முகாமில் மீன் ஊறுகாய், மீன் வடகம், மீன் கட்லெட், மீன் பஜ்ஜி போன்றவை தயாரித்தல் பற்றி விரிவாக பாடம் நடத்தப்படும். இம் முகாமில் சுய உதவிக்குழுக்கள், மீன்சார் தொழில் முனைவோர், மீனவர்கள், மீனவ பெண்கள் மற்றும் ஆராய்ச்சியாளர் போன்றவர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம். சுய தொழில் தொடங்குவதற் கும், மதிப்பூட்டிய மீன் உபபொருட்கள் பற்றி தெரிந்துகொள்வதற்கும் இப்பயிற்சி மிகவும் உதவியாக இருக்கும். ஆண், பெண் ஆகிய இருபாலாரும் கலந்துகொண்டு பயன்பெறலாம். மேலும் தகவல்களுக்கு 04652-286107 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இளம் விவசாயிகளுக்கு வணிக மேலாண்மை பயிற்சி

க்கலை, : தக்கலை புனித அலோசியஸ் கலை யரங்கில் இளம் விவசாயிகளுக்கான வணிக மேலா ண்மை பயிற்சி அளிக்கப்பட் டது. சூசைமிக்கேல் தலைமை வகித்தார். ஜோசப்பெயின் வரவேற்றார். ஜெபமலர் அறிமுகம் செய் தார். அருட்பணியாளர் ஜெனிபர் எடிசன் முகாமைத் தொடங்கி வைத்தார். வேளாண் அறிஞர் ராஜ குமார் அக்ரி பிசினஸ் என்ற தலைப்பில் வேளாண்மையுடன் தொடர்புடைய தொழில்கள் குறித்து விளக்கியதுடன் வேளாண்மை வணிகம் வாயிலாக விவசாயிகளும், நுகர்வோர்களும் பயனடைய முடியும் என கூறினார்.

தொடர்ந்து பிரிட் டோ, அருள்டோனியோ, நிஷா, ஜாஸ்லின், சகாயசுனிதா ஆகியோர் குழு விவாதத்தில் ஈடுபட்டனர்.

**<u>ஷெட் அமைக்க விவசாயிகள் கோரிக்கை ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் நெல் மூட்டைகள் வரத்து அதிகரிப்பு</u>**

புதுச்சேரி, : புதுச்சேரி தட்டாஞ்சாவடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நெல் மூட்டைகள் வரத்து கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளது. பிள்ளையார்குப்பம், கூடப்பாக்கம், தொண்டமாநத்தம், காலாப்பட்டு, அரியாங்குப்பம், நோணாங்குப்பம், பாகூர், வில்லிய னூர் ஆகிய பகுதிகளி லிருந்தும் தமிழகத்திலிருந்து மரக்காணம், வண்டிபாளையம், கிளியனூர், தைலாபுரம், வானூர், தழுதாளி, எடைச்சேரி ஆகிய இடங்களிலிருந்து விவசாயிகள் சுமார் 4 ஆயிரத்துக்கும் அதிகமான நெல் மூட்டைகளை கொண்டு வந்துள்ளனர். புதுவை விற்பனைக்குழுவின் கீழ் இயங்கும் இதர ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலும் (மதகடிப்பட்டு, கன்னியக்கோவில், கூனிச்சம்பட்டு, மடுகரை) அதிகளவில் நெல் மூட்டைகள் வந்துள்ளது.நெல் மூட்டைகள் அதிகளவில் வந்திருந்தாலும், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. தட்டாஞ்சாவடியில் வெள்ளை பொன்னி ரூ. 1369, பிபிடி ரூ.1169, ஏடிடி-37 ரூ.1059 ஏடிடி-39 ரூ.1120, ஏடிடி-45 ரூ.985, பிஎம் ரூ.967, கப்பகார் ரூ.817 என விலை நிர்ணயம் செய்யப்பட்டு வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்டது. கூடுதல் நெல் வரத்தால் வெளியிடங்களில் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. திடீர் மழையால் நெல் பாதிக்கப்படாமல் இருக்க கூடுதல் ஷெட் அமைத்து தர வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். ஒழுங்கு முறை விற்பனை கூட செயலர் சிவசண்முகம் கூறுகையில், தமிழகத்திலிருந்து ஏராளமான நெல் மூட்டைகள் வருவது வழக்கம். முன்பு மாதிரி மழை இல்லை. இருந்தால் இன்னும் அதிகமான மூட்டைகள் வரும். இருப்பினும்

இன்னும் 10, 15 நாட்கள் நெல் மூட்டைகள் வரும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>புற்றுநோய்க்கு எதிராக செயல்படுகிறது: காடை முட்டையில் மருத்துவ குணங்கள் அதிகம்</u>**



திண்டுக்கல், கோழி முட்டைகளை விட, காடை முட்டையில் மருத்துவ குணங்கள் அதிகம் இருப்பதாக, கால்நடை மருத்துவ பல்கலைக்கழக அதிகாரி தகவல் தெரிவித்து உள்ளார். காடை முட்டை பயன்பாடு அதிகரிப்பு இறைச்சிகளை சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வித விதமான இறைச்சிகளை பலர் விரும்பி சாப்பிடுகிறார்கள். அந்த வகையில் காடை இறைச்சி சற்று பிரபலமாக கருதப்படுகிறது. சாலையோர தள்ளுவண்டி கடைகள் முதல் நட்சத்திர ஓட்டல்கள் வரை காடை இறைச்சிகள் விற்பனை செய்யப்படுகின்றன. காடை இறைச்சியை போல், அதன் முட்டையும் சமீப காலமாக பிரபலமடைந்து வருகிறது. இந்த முட்டையை சாப்பிடுவது உடலுக்கு நன்மை தருமா? என்பது நம்மில் பலருக்கு தெரியாது. இது குறித்து கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மைய தலைவர் டாக்டர் பீர்முகமதுவிடம் கேட்டபோது, ‘கோழி முட்டைகளை விட, காடை முட்டைகளில் உடலுக்கு வலு சேர்க்கும் பல்வேறு சத்துகள் பொதிந்து இருக்கின்றன’என்றார்.

அவர்மேலும்கூறியதாவது:-

13சதவீதபுரதசத்துகள்

காடைகள், ஒரு வருடத்துக்கு சுமார் 250 முட்டைகள் வரை இடுகின்றன. இது, கோழி முட்டைகளை காட்டிலும், சுவை மிக்கதாகும். இதில், கோழி முட்டைகளை விட 3 முதல் 4 மடங்கு வரை அதிகமான உணவு சத்துகள் நிறைந்துள்ளன. கோழி முட்டையில் 11 சதவீத புரதம் உள்ளது. ஆனால், காடை முட்டையில் 13 சதவீத புரதம் இருக்கிறது. இதில், 'பி2' இரும்பு சத்து, பொட்டாசியம், பாஸ்பரஸ், சுண்ணாம்பு சத்து ஆகிய சத்துகள் கோழி முட்டையில் இருப்பதை விட அதிக அளவு இருக்கின்றன. மேலும், எச்.டி.எல். என்னும் கொழுப்பு சத்து உள்ளதால் வயதானவர்களும் இதை உண்ணலாம். காடை முட்டையில் உடலுக்கு கேடு விளைவிக்கும் கொழுப்பு சத்து குறைந்து, மனித மூளையை இயக்கும் கோலின் என்னும் வேதியியல் பொருள் நிறைந்து உள்ளது. புற்றுநோய்க்கு எதிராக... இரத்த சோகை சிகிச்சைக்கு காடை முட்டைகள் உதவுகின்றன. ரத்தத்தில் உள்ள நச்சுக்களையும், உலோகங்களையும் வெளியேற்றுகின்றது. புற்றுநோய் பெருக்கத்தை தடுத்தும், அதற்கு எதிராகவும் செயல்படுகிறது. ஆண்களின் ஆண்மை தன்மையை மீட்க உதவுகிறது. நினைவாற்றல் மற்றும் மூளை செயல்பாட்டை மேம்படுத்துகிறது.நோய் எதிர்ப்பு சக்தியின் இயக்கத்தையும், உடல் உறுப்புகளையும் வலுவடைய செய்கிறது. இதய தசைகளை பலப்படுத்துகிறது. தோலின் நிறத்தை மேம்படுத்தும் வல்லமை கொண்டது. 2 முட்டைகள் சாப்பிடலாம் காடை முட்டையின் மஞ்சள் கருவில் அதிகம் காணப்படுகின்ற கோலினிஸ்ட்ரேஸ் நொதி மூலம் அல்சைமர் நோய் உருவாகும் ஆபத்தை தடை செய்கிறது. தலை முடியை பராமரிக்கும் சாதனங்களுக்குப் பயன்படுகிறது. குழந்தைகளுக்கு, உணவில் தினமும் இரண்டு காடை முட்டைகள் கொடுத்து வந்தால், நல்ல உடல் வளர்ச்சி பெற்று, தொற்று நோய்த் தாக்கத்திலிருந்து காப்பாற்றப்படுவார்கள். காடை இறைச்சியும்,

முட்டையும் கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துள்ள உணவாக பயன்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**<u>அபூர்வ நட்சத்திர மீன் தனுஷ்கோடி மீனவர்கள் வலையில் சிக்கியது</u>**



தனுஷ்கோடி மீனவர்களின் வலையில் அபூர்வ நட்சத்திர மீன் சிக்கியது. அபூர்வமீன்

ராமேசுவரம் அருகே உள்ள தனுஷ்கோடி எம்.ஆர்.சத்திரம் கடற்கரையிலிருந்து நேற்று முன்தினம் இரவு சிறிய மீன்பிடி படகில் மீனவர்கள் குமார், செல்லத்துரை ஆகியோர் மீன் பிடிக்க சென்றனர். அவர்கள் தனுஷ்கோடி கடல் பகுதியில் மீன் பிடித்து விட்டு நேற்று காலை கரை திரும்பினர். அப்போது அவர்களது வலையில் சிவப்பு கலரில் அபூர்வ நட்சத்திர மீன் ஒன்று சிக்கியிருந்தது. அப்போது அங்கு வந்த சுற்றுலா பயணிகள் படகில் வைக்கப்பட்டிருந்த அரிய வகை நட்சத்திர மீனை பார்த்து ரசித்ததுடன், தங்களது செல்போன்களில் படம் பிடித்துக் கொண்டனர். இதையடுத்து நட்சத்திர மீனை பிடித்த மீனவர் அந்த மீனை ஒரு சுற்றுலா பயணியிடம் விற்பனை செய்தார். இது பற்றி வனத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:- மன்னார் வளைகுடா கடல் பகுதியில் 3600 வகையான அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் உள்ளன. அதில் நட்சத்திர மீன்கள் 2 வகை உண்டு. இவை சிவப்பு, காப்பி கலரில் உள்ளன. இந்த வகை மீன் இனம் தடை செய்யப்பட்டது கிடையாது. என்றாலும் மீனவர்கள் தங்களது வலையில் இந்த மீன்கள் சிக்கினால் அதை எடுத்து மீண்டும் கடலில் வீசி விடுவார்கள். நட்சத்திர மீன்கள் வலையில் சிக்குவது மிக அரிதாகும். இதை கடலில் இருந்து கரைக்கு கொண்டு வந்தால் ஒரு மணி நேரம் உயிரோடு இருக்கும். நட்சத்திர மீனானது கடலில் உள்ள சிறிய

மீன்களை இரையாக உட்கொண்டு வாழக் கூடியது. நட்சத்திர மீனை மீனவர்கள் யாரும் உணவாக உட்கொள்ள மாட்டார்கள். நட்சத்திர மீன்களை சுற்றுலா பயணிகள் வாங்கிச் சென்று வீடுகளில் அழகு சாதனப் பொருளாக பயன்படுத்துகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## நாமக்கல்லில் 6,500 மூட்டை பருத்தி ரூ.95 லட்சத்துக்கு ஏலம்



நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றபோது

நாமக்கல்லில் 6,500 மூட்டை பருத்தி ரூ.95 லட்சத்துக்கு ஏலம் போனது. பருத்திஏலம்

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு, துணை தலைவர் நல்லதம்பி மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன் னிலையில் பருத்தி ஏலம் நடந்தது. இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம் பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 6,500 மூட்டை பருத்தியை விற்பனைக்குகொண்டுவந்திருந்தனர்.

ரூ.95லட்சத்துக்குஏலம்

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.95 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 550 முதல் ரூ.3 ஆயிரத்து 890 வரைக்கும், டி.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 900 முதல் ரூ.4 ஆயிரத்து 510 வரைக்கும், சுரபி ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 200 முதல் ரூ.4

ஆயிரத்து 790 வரைக்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணா புரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர். பருத்தி சீசன் தொடங்கி விட்ட தால், இனிவரும் காலங்களில் பருத்தி மூட்டைகளின் எண் ணிக்கை அதிகரிக்கும் என கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி



பொன்னமராவதி அருகே ஆலம்பட்டி கிராமத்தில் நெல் விதைக்கிராமதிட்ட பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயபாலன் தலைமை தாங்கினார். ஆலம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் வெள்ளையம்மாள்அடைக்கன் முன்னிலை வகித்தார். புதுக்கோட்டை விதை ஆய்வு அலுவலர் பாண்டி விதைச் சான்று நடைமுறைகள் மற்றும் விதை விற்பனை குறித்த விதைச்சட்டத்தின் ஷரத்துக்களை பற்றியும் துணை வேளாண்மை அலுவலர் மாணிக்கவாசகம் திருந்திய நெல் சாகுபடி முறைகள் குறித்தும் பயிற்சி அளித்தனர். மேலும் உதவி வேளாண்மை அலுவலர்கள் மணிமுத்து, குமாரசாமி, அருளானந்தம் ஆகியோரும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். இந்த பயிற்சி முகாமில் ஆலம்பட்டி, முரண்டாம்பட்டி கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் முருகேசன் நன்றி கூறினார்.

# கோழிகளுக்கு தடுப்பூசி முகாம்



தூத்துக்குடி மாவட்டத்தில் அடுத்த மாதம் 9–ந் தேதி முதல் 22–ந் தேதி வரை இரண்டு வாரங்கள் கோழிக் கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது. இந்த முகாமில் கோழிகளுக்கு கோழிக் கழிச்சல் நோய், தடுப்பூசி பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. கோழிக் கழிச்சல் நோய் என்பது கோழிகளை தாக்கும் மிகக் கொடிய நோயாகும். நோய் வராமல் தடுக்க கோழிக் கழிச்சல் நோய்த் தடுப்பூசி போடுவதே ஒரே வழியாகும். எனவே, விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி தாங்கள் வளர்க்கும் கோழிகளுக்கு தடுப்பூசிப்பணி மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த தகவலை தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் தெரிவித்தார்.